# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **22 செப்டம்பர் 2019** | **பொதுக்காலம் 25 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு...

இறைஇயேசுவின் அன்பர்களே! நிலைவாழ்வைத் தேடிப் பொதுக்காலம் ஆண்டின் 25ஆம் ஞாயிறுத் திருவழிபாட்டில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறோம்.

யாருக்குப் பணி செய்வது? நிறைவாழ்வு அடையத் தேவையான முன்மதி என்ன? செல்வத்திற்காக விவேகத்துடன் வாழ தெரிந்த நாம் அருள் வாழ்வு வாழ எடுக்கும் முயற்சி என்ன? நம் வாழ்வின் இலக்கு - பணமா? இறைவனா? என்று பல கேள்விகளுக்கு இன்றைய வாசகங்கள் பதில் தேட உதவுகின்றது.

வாழ்க்கைக்குப் பணம் தேவை. ஆனால் முழுமூச்சாய் பணம் தேடும்போது நாம் அருள் வாழ்வை இழந்து விடுகிறோம். நாம் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்பதை விட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்வதை விட, சொத்துக்களைச் சேர்ப்பது, நம்முடைய குறிக்கோளாக இருந்தால், கடவுள் நமது தலைவர் அல்ல. இந்த உண்மை, நம்மிடம் உள்ள சொத்துக்களுக்கும் மட்டுமல்ல, நம்மிடம் உள்ள மற்றத் திறமைகளையும் சேர்த்துத் தான் குறிப்பிடப்படுகிறது. நாம் எல்லாரும், ஏதாவது ஒரு திறமையோடு, ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அந்தத் திறமைகளை எப்படி மற்றவர்களுக்காக உபயோகிக்கின்றோம்? உபயோகிக்கப் போகிறோம்?

நிரந்தரமற்ற இவ்வுலகப் பொருள்களையும், நிலைவாழ்வுக்குரிய திடமான நம்பிக்கை, ஞானம், நம்பிக்கை அனைத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ளும்போது, நமது நம்பகத்தன்மை உறுதிபடுத்தப் படுகிறது. இறைவனுக்குப் பணிசெய்யும் மக்களாக மாறிட, பொறுப்புள்ள பணியாளராக வாழ்ந்திட இத்திருப்பலிக் கொண்டாடத்தில் இறைவனை மன்றாடுவோம். நம்பதக்கவராய், பெறுப்புள்ள பணியாளராய் வாழ்ந்திடுவோம்.

## தூய தந்தை பியோவின் மரியன்னை பக்தி

தந்தை பியோ, அன்னை மரியாவிடம் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். அவர் அடிக்கடி சொல்லக்கூடிய வார்த்தைகள் இவை: **“இயேசுவின் சிலுவையில் அன்னை மரியாவோடு சாய்ந்து நில்; அப்போது நீ ஆறுதலடைவாய்“.**

1959 ஆம் ஆண்டு பாத்திமா அன்னையின் சுரூபம் வானூர்தியில் இத்தாலிக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது தந்தை பியோ புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அன்னையின் சுரூபம் வானூர்தியில் வருவதை அறிந்த தந்தை பியோ அன்னையை நோக்கி மன்றாடினார். ஆச்சரியம் என்னவென்றால், அவருடைய புற்றுநோய் அவரைவிட்டு நீங்கியது. இப்படி ஏராளமான நன்மைகளை தந்தை பியோ அன்னை மரியா வழியாகப் பெற்றார். ஆகவே, நாளை செப்டம்பர் 23ஆம் நாள் தூய தந்தைப் பியோவின் விழாவைக் கொண்டாடும் நாம், அவரைப் போன்று அன்னை மரியாவிடம் மிகுந்த பக்தி கொண்டு வாழ்வோம். அன்னை வழியாக நிறையருள் நிறைவாய் பெறுவோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! பல்வேறு நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக, நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்காக **இதுவரை S$ 4.3 மில்லியன்** சேர்க்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். மனமுவந்து நன்கொடையளித்த உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்களது நன்றிகள்! நமது ஆலயப் புதுப்பிக்கும் பணிக்குத் தேவையான முழுத் தொகையான **S$ 6.2 மில்லியனை** அடைவதற்கு தொடர்ந்து உங்கள் தாராள மனதையும், செபங்களையும் வேண்டி நிற்கின்றோம்.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு




29-09-2019 ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை

இடம்: ஆலயப் பல்நோக்குச் சமூகக்கூடம்



முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

தொடர்பு: திரு. ரெக்ஸ் (9822-6171)

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி




**நாள்: இன்று மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் இன்று மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில் இரவு** 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## நற்கருணை ஆராதனை வழிபாடு



**06-10-2019 ஞாயிறு மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக் கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காகவும் செபிக்கவும் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | ஆமோஸ் 8:4-7 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 113: 1-2. 4-6. 7-8 |
| **பதிலுரை:** ஏழைகளைத் தூக்கிவிடும் ஆண்டவரைப் போற்றுங்கள். | |
| **இரண்டாம் வாசகம்:** | 1திமொத்தேயு 2:1-8 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செல்வராயிருந்தும் அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 16:1-13 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

